## நூல் வெளியீட்டு விழாவில் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி பேச்சு:

# ஜாதி மத இன உணர்வு இருக்கலாம் - வெறி கூடாது

ஈரோடு, செப்.6–

ஜாதி மத இன உணர்வு இருக்கலாம் -வெறிகூடாது என ஈரோட்டில்நடந்தநூல் வெளியீட்டு விழாவில் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதிசன்பேசினார்.

ஈரோடு கொங்கு கலையரங்கில் "காலிங்கராயன் கதை" நூல் வெளியீட்டு விழா நடந்தது. விழாவுக்கு எஸ்கேஎம். நிறுவனங்களின் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன் தலைமை தாங்கி பேசியதாவது:–

ஆன்மீகத்தில் மனிதன் தர்ம நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளது. தாம் ஈட்டிய பொருளை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது தர்ம சித்தாந்தம். இதைவிட உயர்ந்த தியாகத்தை காலிங்கராயன் செய்துள்ளார். பாசனத்திற்கு கால்வாய் வெட்டியதோடு அன்றி தன் வாரிசுதாரர் யாரும் அதை பயன்படுத்தக் கூடாது மற்றவர்களுக்கு பயன்பட வேண்டும் என்ற தியாக மனப்பான்மை அவரிடம் இருந்துள்ளது வெளிப்படுகிறது. நாடு உள்ள சூழ்நிலையையும் வறட்சியின் சூழ்நிலை யையும் ஆராய்ந்தால் இது தெரியும். எனவே காலிங்கராயன் பற்றிய நூலை அனைவரும் வாங்கி பயன் பெறவேண்டும்.

இவ்வாறு பேசினார்.

சுதா மருத்துவமனை டாக்டர் எஸ்.தனபாக்கியம் கந்தசாமி குத்துவிளக்கேற்றி வைத்தார். மத்திய அமைச்சர் சுப்புலட்சுமிஜெகதிசன் காலிங்கராயன் உருவப் படத்தை திறந்து வைத்தும், காலிங்கராயன் கதை நூலை வெளியிட்டும் பேசியதாவது:–

எனது பெற்றோர் கூறி காலிங்கராயன் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் அவரை பற்றி படிப்பதற்கு நூல் கிடைத்தது இல்லை. அந்த குறையை இப்போது பாஸ்கரதாஸ் தீர்த்து வைத்துள்ளார். நூல் வெளியிடுவது என்பது ஆர்வம் உள்ளவர்களால் மட்டும்தான் முடியும். சாதாரணமாக எல்லோராலும் முடியாது. காலிங்கராயன் பல்வேறு இன்னல்களுக்கும் தடைகளுக்கும்இடையே வாய்க்கால் அமைத்துள்ளார். தமிழகத்தில் சென்னை முதல் கன்னியாகுமரி வரை ஒவ்வொரு கிராமங்களுக்கும் கழக பிரச்சாரத்திற்காக சென்று உள்ளேன். ஆனால் கொங்கு நாட்டு மக்கள் உணர்வு, ஆர்வம், திறமையை வேறு எங்கும் பார்த்தது இல்லை. கொங்கு நாட்டு மக்கள் உழைப்பாளிகள். இப்படி கூறு வதால் மற்ற பகுதிகளை குறைவாக மதிப்பிடுவதாக கருத வேண்டாம். இந்த மக்களுக்கு உழைப்பை தவிர வேறு ஒன்றும் தெரியாது. தற்போது வாய்க்காலில் தண்ணீர் விடப்பட்டுள்ளது. எனவே அவர்கள் உழைப்பில் உள்ளதால் இங்கே அதிகம் காணப்படவில்லை. நான் மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது பாசனப்பகுதி களுக்கு தண்ணீர் பகிர்ந்து அளிக்க வேண்டும் எனமுயற்சி செய்தேன். மேலும் தமிழக அரசிடம் ரூ.2 கோடி நிதி பெற்று பாசன கால்வாய்கள் 75 சதவீதம் சிரமைக்கப்பட்டன. மீதமுள்ள பணியையும் உங்களுக்காக சிரமைக்க நடவடிக்கை மேற்கொள்வேன். காலிங்கராயன் வாய்க்கால் வெட்டிய காலம் முதல் வறட்சி இன்றி தண்ணீர் ஓடியது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக வாய்க்கால் வறண்டு விட்டது. எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் சின்ன குழந் தையாக இருந்த போது அணைக்கரை சாமியையும், காலிங்கராயனையும் வணங்கி உள்ளோம். ஆனால் அந்த பண்புகள் தற்போது மங்கி விட்டன. இனியாவது ஆண்டுக்கு ஒருமுறை நாம் முன்னோர்கள் வழிவந்த தெய்வங்களை வணங்க வேண்டும். பவானி ஆற்றில் இருந்து காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் வருகிறது. காவிரி நீரை விட பவானி நீர் பன்னீர்போல் இருக்கும். ஆனால்தற்போது காலிங்கராயன் வாய்க்கால் தொழிற் சாலைகளால் மாசுபட்டு பயன் படுத்த முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது. விவசாய தொழிலாளர்கள் கால்களில் நோய்கள் வருகின்றன. மகசூல் பாதிக்கப்படுகிறது. அந்த அளவிற்கு சாக்கடை நீர், கழிவு நீர்கலக்கிறது. ஒவ்வொரு கொங்கு இனத்தவர் திருமண நிகழ்ச்சியின் போதும் அன் பளிப்பாக காளிங்க ராயன்வரலாற்று நூலை வழங்க வேண்டும். ஜாதி, மத, இன உணர்வுகள் இருக்க வேண்டும். ஆனால் அதுவே வெறியாக மாறிவிடக் கூடாது.

இயக்குனர் விஜய் கிருஷ்ணராஜ், நூல் ஆசிரியர் பாஸ்கரதாசன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

முனைவர் சிலம்பொலி செல்லப்பன், யூ.ஆர்.சி. நிறுவனங்களின் தலைவர் யூ.ஆர்.சின்னசாமி, சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் பி.சி.துரைசாமி, வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர், கொங்கு கலையரங்க தலைவர் ஆர். வேலுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். காலிங்கராயன் வம்சாவழியினர் ஏ.எம்.ஆர். கிருஷ்ணராஜ் காலிங்கராயர், ஏ.எம்.ஆர். மோகன்ராஜ்காலிங்கராயர், ஏ.எம்.ஆர். அருண்குமார் காலிங்கராயர் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். முன்னதாக கொங்கு நண்பர்கள் சங்கதலைவர் கே.சி.காளியண்ணன் வரவேற்றுப்பேசினார். முடிவில் கொங்கு என்.கொளந்தசாமி நன்றி கூறினார்.